# மார்க்கண்டேயர்

திருவள்ளூர் வெஸ்லியன் மிஷன் ஹைஸ்கூல் 175

தலைமைத் தமிழ்ப்புலவர்

## சேலை-சகதேவ முதலியார்

எழுதியது.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1925

ஜிஸ்தர் செய்தது] [விலை 2½ அணா.

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS.

# முகவுரை

செந்தமிழ்ச் செல்வர்காள! மார்க்கண்டேயர் வரலாறு, கந்த புராணத்தின்கண் பரக்கக் கண்டிருப்பினும் அது பாடசாலையில் படிக்கும் சிறுவர்கட்கு மிக்குப் பயன் படாமை நோக்கி அதை இச்சிறு சுவடியின்கண் சுருங்கச் சொல்லி விளங்கவைத்திருக்கின்றேன். இதன்கண் காணப்படும் சம்பாஷணைகள் மாணாக்கர்கட்கு அறிவையும் அகமகிழ்ச்சியையும் உண்டாக்குமென்று நம்புகின்றேன். இதில் இரண்டோரிடங்களில் கதைப் போக்கையொட்டிப் படிப்போருக்கு இனிமை பயக்கும் பொருட்டுப் புது விஷயங்கள் சேர்த்தெழுதப்பட்டிருக்கின்றன. கூற்றங் குதித்து உய்ந்த பிள்ளையாகிய மார்க்கண்டேயர் சரிதையை மாணவர்கள் கருத்தாகப் படித்துப் பாஷா ஞானத்தை யடைவதே யன்றி, அதன்கண் பொதிந்துள்ள உட்கருத்தையும் உய்த்து நோக்கி உயர் ஞானத்தை யடைய ஊக்கங் கொள்வார்களாக.

2-1-1923. சே. சகதேவன்.



மார்க்கண்டேயர்.

# மார்க்கண்டேயர்

## I. இல்லத்துறவு

'இல்லற மல்லது நல்லற மன்று'

உலகத்திலுள்ள மனிதர் தமது வாழ்நாட்களை நலம்பெறக் கழித்து நற்கதி பெறுமாறு ஆன்றோரால் நாட்டிவைக்கப்பட்டுள்ள நிலைகள் நான்காம். முதலில் ஒருவன் தனது இளமைப்பருவம் கடந்து, உலக வியவகாரங்களில் நுழையும் வரையில், கல்வி கேள்வி களில் கருத்துடன் காலத்தைச் செலுத்தி, தாய் தந்தை தமையன்மார்களுக் கடங்கி, அரசன் குரு இவர்களின் கட்டளை கடவாது நடந்து, நற்குண நற்செய்கைகளிற் சிறந்து, நலம்பெற நிற்கவேண்டும். பிறகு நற்குடியிற் பிறந்தும் சகலநற்குணங்களிற் சிறந்தும் தன் மனத்துக் கொத்துமுள்ள கன்னிகையை மணந்து, நல்வழியிற் பொருளீட்டி, உற்றாரையும் மற்றாரையும் பாராட் டிப் பாதுகாத்து, தன் குடிக்கும் தன் ஊருக்கும் தன் நாட்டிற்கும் தன்னால் ஒரு சிறப்புண்டாகும் படி வாழவேண்டும். அதன் பிறகு உலக ஆசையை யொழித்து, மனையாளோடு வனத்திற் சென்று, கண்ட தையும் கிடைத்ததையும் அருந்தி, சாத்திர ஆராய்ச்சி யிலும் தெய்வத்தியானத்திலும் காலத்தைக் கழிக்க

வேண்டும். கடைசியாக எல்லாப் பற்றுக்களையும் ஒழி த்து முற்றத்துறந்த முனிவனாக வேண்டும். ஒருவன் இந்நிலைகள் ஒவ்வொன்றிலும் ஒழுங்காய் நின்று வாழ் தலே தகுதியும் தருமமும் ஆம். இவற்றில் முன் னிரண்டு நிலைகளை இல்லறமென்றும், பின்னிரண்டு நிலைகளைத் துறவறமென்றுங் கூறுவர். இவ்வறங்களிற் செவ்வனே நின்று சிறப்புற்றோர் பலர். அவர்களில் ஒருவர் வரலாற்றை இங்கெடுத்துக் கூறுகின்றோம்.

இப்போது நாடாயுள்ள தென்னிந்தியாவானது ஒரு காலத்தில் காடா யிருந்தது. அக்காலத்தில் இதற்குத் தண்டகாரணியமெனப் பெயரிட்டு வழங்கி னர். இதில் அங்கங்கே பற்பலவிடங்களில் முனிவர் களது தழைவேய்ந்த குடிசைகள் உண்டு. இவைகள் ஒவ்வொன்றிலும் ஓர் தவசியும் அவர்தம் மனைவியும் மக்களும் மாணாக்கருங் காணப்படுவர். அம்முனிவர் குமாரர்கள் ஆங்குள்ள மாணாக்கர்களுடன் கூடி நூல்களை யோதுவர். அவர் வெளியே உலாவப் போம்போது மைந்தரும் மாணாக்கரும் உடன் செல்வர். அவர் இவர்களுக்கு அவ்வப்போது அரும் பொருள்களை அருளிச்செய்வர். பூமியையே ஒரு புத்தகமாகக் கொண்டு மாணாக்கர் தாமாகவே பயில வேண்டிய கல்வியில் முனிவர் வேண்டிய உதவிபுரிவர். அன்றியும் இலக்கியம், இலக்கணம், தர்க்கம், நீதி சாத்திரம் ஆகிய இவைகளை நியமப்படி கற்பிப்பர். மாணாக்கர் ஆசிரியர் மனங் கோணாதபடி அவருக்குப் பணிவிடை செய்து அவரது தேகத்திற்கு யாதொரு நோய் நொடியும் வராதபடி அவரைப் பலவிதத்தா லும் பாதுகாத்துக்கொள்வர். ஆங்கு அம்மாணாக்கர்

எல்லாக் காரியங்களிலும் ஏவாமக்களா யொழுகுவர். இவ்வாறு அவர்கள் அங்குப் பதினறுண்டுவரை குரு குல வாசஞ்செய்து, கல்வி கேள்விகளில் வல்லவராய், ஆசிரியர் மன் முவக்குமாறு அவருக்குக் குரு தக்கணை யளித்து, அவர்தம் அனுமதி பெற்றுத் தம் பெற்றோ ரிடம் செல்வர். முனிவர் மக்களும் தத்தமக்கேற்ற கன்னிகைகளை மணஞ்செய்துகொண்டு வெவ்வேறு வீடுகளில் நியம நிட்டைகளில் தவருது நடந்து சிறப் புற்றோங்குவர்.

இத்தகைய இருக்கைகளி லொன்று மிருகண்டு முனிவருடையது. இவர் குச்சகமுனிவர் பௌத்தி ரரும் மிருககண்டுயே முனிவரது புத்திரரு மாவர். குச்சகமுனிவர், மதயானை ஒன்றைக் கண்டு வெருண் டோடித் தவறிக் கிணற்றில் விழுந்திறந்த உசத்திய முனிவரது புத்திரிக்குத் தமது தவ வலிமையினல் இயமனைச் சந்தோஷிப்பித்து, அவனல் மீட்டுந் தரப் பட்ட அவளது உயிரைக் கொடுத்து, விருத்தை யென நாமம் வாய்ந்த அவளையே தம் புத்திரனகிய மிருக கண்டுயேருக்கு மணஞ் செய்வித்த மகருஷி. மிருக கண்டுயேர் விருத்தையோடு இல்லறம் நடாத்தித் தமது பெருந் தவப் பேற்றல் மிருகண்டுவைப் பெற்று, அப்புத்திரனுக்கு ஆரு மாண்டில் உபநயன முடித்து வேறோ ரிடத்திலே தனித்தவம் புரியச் சென்றர். மிருகண்டர் ஓர் ஆசிரியரை வழிபட்டு, பல கலைகளை யும் ஓதி, நற்குண நற்செய்கைகள் வாய்க்கப்பெற்று, ஒழுக்கத்திற் பிறழாது நடந்து, முற்கலமுனிவர் நற் றவச்செல்வியாகிய மருத்துவதி என்னும் மாதை மணம்புரிந்துகொண்டார். அம்மாது கற்பிற் சிறந்

தவள்; கணவனைக் கடவுளாகப் பாவிப்பவள்; வந்த விருந்தாளிகளுக்கு அன்னம் படைத்து, வரும் விருந் தாளிகளுக்கு எதிர்பார்ப்பவள்; வீணிற் காலங் கழிக்காதவள்; இல்லறத்தை இனிமைபெற இயற்று பவள்; இது புண்ணியம் இது பாவம் என்றறிந்து நடப்பவள்; எதையும் குறிப்பறிந்து செய்பவள்; மைந்தரையும் மாணுக்கரையும் ஒரு கண்ணுற் பார்ப் பவள்; துறவறத்திற்கும் தூய்மைத் துணை யாகுபவள். இவ்வரிய குணங்களைக் கொண்ட மருத்துவதியுடன் மிருகண்டர் தமது பழைய இருக்கையிலேயே தங்கி, ஈருடலும் ஒருயிருமெனவிருந்து, மன வாக்குக் காயங் களா லொத்து, தெய்வசிந்தை மேற்கொண்டு, ஜீவ காருணிய முடையவராய் இல்லறத்தில் இம்மியுந் தவறு தொழுகுவராயினர்.

## II. மனைமாட்சி

‘செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு’

வனத்தில் வாழும் முனிவர்கள் அடிக்கடி ஒரு வரையொருவர் சந்தித்துச் சாத்திர விடயங்களைப் பற் றிப் பேசிக்கொண்டிருப்ப துண்டு. மிருகண்டு முனி வர் ஒருநாள் வேறோர் முனிவரின் இருக்கைக்குச் செல்ல, அங்கு அக்காட்டின்கண் வாழும் இவரை யொத்த பல முனிவர்களுஞ் சென்று கூடி யிருந்தனர். யாவரும் கடவுள் இலக்கணங்களைப் பற்றிப் பேசிக் கொண் டிருக்கையில், சிற்சில கருத்துக்களில் ஒரு வருக்கொருவர் மாறுபட்டனர். முனிவர்கள் தம்தம்

கொள்கைகளை நிலைநாட்ட எண்ணவே தர்க்கவாதங்கள் தலையெடுத்தன. இவ்வாறு மிருகண்டு முனிவர் அச்சபையில் ஆழ்ந்த சிந்தை யுடையவராய்த் தமது கவனத்தை யெல்லாம் ஆங்கேயே செலுத்தி யிருக்க, அவரது ஆச்சிரமத்தில் நேர்ந்த அதிசய மொன்றை அறிவிப்பாம்.

அன்று காலையில் மிருகண்டு முனிவருடன் மாணவர்களும் போய்விட, மருத்துவதியம்மையார் தனியே யிருந்து தமக்குற்ற வீட்டு வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர். உதயமாய் ஒன்பது நாழிகை கழிந்ததும் உத்தமர்களாகிய முனிவர்கள் பதின்மர் வேறிடத்திருந்து மிருகண்டர் வாழும் இருக்கை தேடி யடைந்தனர். வந்தவர்களுக்கு அம்மையார் கால் கழுவ நீர் தந்து இருக்கை யளித்து இருக்கச் செய்தனர். அவர்கள் யாவருடைய யோக க்ஷேமங்களையும் அன்பாய்க் கேட்டு அறிந்தபின், மிருகண்டர் அப்போது தங்களுடன் இருக்கக் காணப்படாததைக் குறித்து மிகவும் வருந்திப் பேசினர். அச்சமயத்தில்,

மருத்துவதி — என் அவ்வளவு மனவருத்தம், முனிவர் உணவருந்த இருக்கைக்கு வந்துவிடுவாரே.

முனிவரில் ஒருவர் — வந்து விடுவாரென்றே நினைக்கின்றேன்.

மற்றொரு முனிவர் — வருவதென்றால் இதற்குள்ளாகவே வந்திருக்க வேண்டாமா. நேரமாய் விட வில்லையோ. சிவபூசை வேளையு மாய்விட்டதே! எனக்கென்னமோ ஐயமாய்த்தா னிருக்கின்றது.

2

மருத்துவதி — என், ஒவ்வோர் வேளையில் பத்துப் பதினைந்து நாழிகைக்கும் வருவதுண்டு. தாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

இன்னொரு முனிவர் — அம்மணி, தாங்கள் சொல்வது உண்மையே. ஓரமயம் யான் பரத்துவாச முனிவரிடம் சென்றிருந்தேன். அப்போது அங்கு முனிவர் கூட்டம் நிறைந்திருந்தது. மிருகண்டரும் அக்குழாத்தின்கண்ணிருந்தனர். ஏதோ சாத்திர விஷயமாய்ப் பேச ஆரம்பித்துவிட்டோம். விவாதங்கள் பலவாறு நேர்ந்தன. மிருகண்டர் எதற்கும் விட்டுக்கொடுத்தாரில்லை. அவரது கட்சியே மேலோங்கி நின்றது. நெடுநேரமாய்விட்டதென்று கூட்டம் கலைந்தது. நமது கணவர் இவ்வாறு பேசப் புகுந்தால் பசியைப் பார்ப்பவரல்லரே.

வேறொரு முனிவர் — அதற்கென்ன சந்தேகம், யானும் அதைப் பல தடவைகளில் அவரிடங் கண்டுள்ளேன். அம்மணி, அவர் இங்கு வர நெடுநேரமாகலாம், ஆகையால் யாங்கள் போய் வருகிறோம், விடை தருக.

மருத்துவதி — அவர் இதுவரையில் அன்னமருந்தவராமல் அயலகத்தில் நின்றதை யான் அறியேன். ஆகையால் எந்நேரமாயினும் அவர் வருகை நிச்சயமே. முனிவர்காள்! யாதுங் கவலைப்படற்க. யாவருக்கும் அன்னபானுதிகள் அனைத்தும் நம் அகத்திலேயே ஆக்கிவிடுகின்றேன். அனைவரும் இங்கிருந்துவிட்டு மாலையில் அவரவர் இஷ்டப்படி

செய்யலாம்; எனது கோரிக்கையை மனங் கொண்டு நிறைவேற்றுவீராக.

மருத்துவதி அம்மையாரின் வேண்டுகோளுக்கு மறுத்துச் சொல்ல அஞ்சி, முனிவர்கள் மிருகண்டர் இல்லத்திலேயே அப்பகலைக் கழிக்கத் தீர்மானித்து, நீராடிவர வெளியே சென்றனர். அம்மையார் அறுசுவை யுண்டி யமைத்து வைத்ததுந் தவிர அடவியிற் காணப்படும் பலவிதப் பழவருக்கங்களையும் சேகரித்துக்கொண்டு கணவனார் வருகையையும், காலையில் வந்த முனிவர்கள் வருகையையும் எதிர்பார்த்துக் கொண்டு இல்லத்தின்கண் ணிருக்க, பன்னிரண்டு மணிக்கெல்லாம் விருந்தாக வந்த முனிவர்கள் விரைவாய் வந்து முனிவர் அகம் அடைந்தனர்.

மருத்துவதி — வாருங்கள் முனிவர்காள்! அடியேன் நாயகரையும், நும்மையும் எதிர்பார்த்தவண்ணம் நிற்கின்றேன். யாதுகாரணமோ அறியேன், அவர் இன்னும் வந்தாரில்லை. சமையலாய்விட்டது. தாங்கள் போஜனத்துக் குட்காரலாம்.

ஒரு முனிவர் — பார்த்தீர்களா, யான் சொன்னது சரியாய்விட்டது. அவரை இன்றைக்குத்தானு கண்டேன், பலநா ளறிவேனே! மிருகண்டர் வாதத்துக் குட்காந்தாரானல் எமகண்டமல் லவோ எழுந்திருப்பது, பொழுது விடிந்தல் லவோ போகும். அவரென்ன அவ்வளவு சீக்கிரத்தில் வருகிறவரா!

மற்றொரு முனிவர் — சரி, இருக்கட்டும், இப்போது அம்மையாருக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்?

இன்னொரு முனிவர் — அம்மையாருக்கென்ன ! அன்புக்குக் குறைவில்லை, ஐயர் வராத குறையொன்றுதான். அம்மணி, இன்னுஞ் சிறிது நேரந் தாழ்க்கலாமே, வந்தாலும் வந்துவிடுவார்.

மருத்துவதி — தங்களிஷ்டப்படியே செய்யலாம், நேரமாய்விடுகிறதே யென்று அஞ்சுகின்றேன்.

வேறொரு முனிவர் — அம்மணி, யஜமானரில்லாமல் யாங்கள் எப்படி போஜனங் கொள்வது? சிறிது நேரஞ் சென்று யோசித்துச் செய்வதைச் செய்யலாம். தாங்கள் தயவு செய்து உள்ளே சென்றிருங்கள். நாங்களும் நடந்து வந்த இளைப்பைச் சிறிது ஆற்றிக்கொள்ளுகின்றோம்.

மருத்துவதி — இதோ பாய் விரித்தேன். அப்படியே செய்யுங்கள்.

முனிவர்கள் யாவரும் சிலர் சயனித்துக்கொண்டும், சிலர் உட்காந்துகொண்டும் யோசிக்கலாயினர். அவர்களில் முதியோரான ஒருவர், "இதென்ன தரும சங்கடத்தி லகப்பட்டுக்கொண்டோமே. முனிவர் வரும் வழியைக் காணோம். அம்மையாரும் நமக்கு அமுதளிக்காமல் அனுப்பப்போகிறதில்லை. முனிவர் உடனிருந்து உண்பிக்காத போஜனம் சுகப்படுமா? ஏன் வந்தோமென்றல்லவோ நமக்குத் தோன்றுகின்றது. யாது செய்யலாம்? அன்னங் கொள்ளாமற் போவ தழகன்று. அம்மையாருக்கு வருத்தம் இருமடங்காகும், முனிவருங் கேள்விப்பட்டால் மிக வருந்துவர். ஆகையால் அவர் வந்து சேராவிட்டாலும் நாம் அம்மையாரைத் திருப்தி செய்துவிட்டே போகவேண்டும். இதுவே எனக்கு நலமெனத்

தோற்றுகின்றது, என்ன முடிவு?" என்று இவ்வாறு இயம்ப, யாவரும் அதனையே ஆமோதித்துக் கொண்டு சிறிதுநேரம் களைப்பாறி யிருந்தனர்.

நண்பகல் முடிந்து மாலைப்போ தணுகும் அமய மாய்விட்டது. மிருகண்டர் வரவை எதிர்பார்ப்பதில் யாதொரு பயனும் இலதென்று அம்மையாருக்குத் தோன்றியது. விருந்தாக வந்திருக்கும் முனிவர் குழாத்துக்கு உண்டியருந்தாமல் இன்னும் காலவிளம் பனஞ் செய்வது அவர் மனத்துக்குச் சிறிதும் பிடிக்க வில்லை. ஆகையால் அவர் முனிவர்க ளிருக்கு மிடத் துக்கு விரைந்து வந்து அவர்களை நோக்கி "ஐயன்மீர்! வெகுநேர மாய்விட்டது, இன்னுங் காத்துக்கொண் டிருப்பதில் அனுகூல மிலதென்றே தோன்றுகின்றது. ஆகையால் நீவிர் அடியாள்மீது கிருபை வைத்து உணவருந்த எழுந்திருக்க வேண்டும்," என்று அன் பொழுகு மொழிகளால் ஆவலுடன் அழைத்தனள். ஏற்கெனவே அவ்வாறு செய்யத் தீர்மானித்துக் கொண் டிருந்த முனிவர்கள் உடனே எழுந்து கைகால் அலம்பிக்கொண்டு பந்தியில் உட்காந்தார்கள். நால் வகைப் பதார்த்தங்களும் நன்கு பரிமாறப்பட்டன. உண்பதற்கும் உத்தரவு பிறந்துவிட்டது. அச்சம யத்தில் அவர்களில் முதியோராகிய முனிவர் மருத்து வதியாரை நோக்கி, "அம்மணி, நுமக்குப் புத்திரர் எத்தனை பேர்?" என்றனர். இதைக் கேட்ட அம்மை யார் அகம் பதைத்து முகம் வெளுத்து, "சுவாமிகளே, அடியாளுக்கு மனமொத்த கணவ ரிருந்தும், புத்திர பாக்கிய மேதோ குறைவாக விருக்கின்றது. கடவுள் என்றைக்குக் கிருபை வைப்பாரோ, அவனரு ளிருந் தால் எதுதான் முடியாது. இருக்கட்டும், தாங்கள்

போஜனம் செய்யுங்கள், மாலைப் போதாய்விட்டது,'' என்றனள். இதைக் கேட்ட அம்முதியோர் சிந்தா குலத்துடன் மருத்துவதியை நோக்கி, "அம்மணி, பலவகையான நரகங்களில் புத் என்பதும் ஒன்று. அது புத்திரபாக்கிய மில்லாதவர்க ளடைவது. புண் ணிய மில்லாதவர்களே அக் கதியிற் சென்றுழலுவர். ஆகையால் நீரும் நுமது கணவரும் பாபியானீர்கள். அப்படிப்பட்ட பாபிகள் இல்லத்தில் யாம் உணவருந் தோம்; போய்வருகிறோம்,'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து போய்விட, அவரைப் பின் தொடர்ந்து மற்ற முனிவர்களும் ஏகிவிட்டனர். அது கண்ட மருத்துவதியார் துன்பத்தினால் விழுங்கப் பட்டவராய் உன்மத்த மடைந்து உடல்சோர்ந்து அகத்திலோர் மூலையில் அடியற்ற மரம்போல் விழுந்து மூர்ச்சை யடைந்து பிணம்போற் கிடந்தனள்.

## III. மகப்பேறு

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலன் நன்மக்கட்பேறு''

மிருகண்டு முனிவர் வேறோர் தவசியினிடம் சென்றிருந்தா ரென்றும், ஆங்குக் கடவுளைப் பற்றிய சிலபேச்சுக்கள் நிகழ்ந்துகொண் டிருந்தனவென்றும், அதன்கண் வாதப்பிரதிவாதங்கள் விஞ்சினவென்றும், அதனால் அவருக்கு இல்லத்துக் கேகக் காலந் தாழ்ந்த தென்றும் முன்னே சொன்னோமல்லவா? மிருகண் டர் வெகு நேரம் வாதித்துப் பேசித் தமது கட்சி யையே நிலைநாட்ட, வாதம் முடிந்து கூட்டங் கலைந் தது. இதற்குள் பரிதியும் மேற்கடற்பட்டான். மிரு

கண்டர் விடைபெற்றுக்கொண்டு தமது மாணாக்கருடன் விரைவாக நடந்துவந்து விளக்கு வைத்துப் பத்து நாழிகைக்கு வீடு வந்து சேர்ந்தனர்.

இல்லத்தில் நுழைந்து பார்க்க இதுவரையில் தம்மை எதிர்பார்த்துக்கொண்டு நிற்கும் இல்லக்கிழத்தியார் எங்கும் காணப்படாதது கண்டு மிருகண்டர் மனத்தாங்கல் கொண்டு மாணவரை நோக்க, அவர்கள் மூலை முடுக்குகளெல்லாம் தேடினர். அவ்வாறு தேடும்போது ஓர் இருட்டான இடத்தில் மருத்துவதியாரைக் கண்டு மாணவரில் ஒருவன் "அம்மா, இதோ இருக்கின்றார்கள்" என்றான். அதைக் கேட்ட முனிவர் அவசரமாகச் சென்று அம்மையாரை நோக்கி "என் கண்மணி, இதென்ன அலங்கோலம், வீடெல்லாம் தேடும்படி வைத்துவிட்டாயே" என்றார். அம்மையார் திடுக்கிட்டுக் கணவரை நோக்க, முனிவர் அவர் முகத்தின் வாட்டத்தைக் கண்டு அகவாட்டம் ஏதோ விருக்கின்றதென் றையமுற்று, மனைவியை நோக்கி "யான் சென்று வருவதற் குள்ளாக உனக்கு என்ன குறை நேர்ந்துவிட்டது? அது ஏதோ அரிய பெரிய குறையாகவும் காணப்படுகின்றதே, என்ன விசேடம்?" என்றார். அதற்கு அம்மையார் "யான் இதுவரையில் தங்களுக்காகக் காத்துக்கொண் டிருந்து, உணவருந்தாமல் தங்களைப் பற்றிக் கவலையடைந்து, ஒரு மூலையில் உறங்கிக் கிடந்தேன். தாங்கள் உடனே உண்டி யருந்திக் களைப்புத் தீர்த்துக்கொள்ளுங்கள், யானும் பசியாற்றிக் கொள்ளுகின்றேன்" என்றனள். முனிவர், மனைவியார் பசியோடிருப்பதால் தமக்குண்டான சந்தேகத்தைப் பற்றி ஊன்றிக் கேளாமல் ஒருவாறு இருந்துவிட்டார்.

அன்றைப்போது கழிந்தது. அதுமுதல் மிருகண்டு முனிவர் தமக்குள்ள சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளச் சமயம் பார்த்துக்கொண் டிருந்தனர். மருத்துவதியம்மையாரும் தமது மனக்குறையை மணவாளருக்குத் தெரிவிக்க மனத்தின்கண் மிக்க கவலையுடன் தக்க காலம் எப்போது வாய்க்கு மென்று ஏக்கங்கொண் டிருந்தார். ஒருநாள் மாலைப்போதில் அடவியின்கண் மிருகண்டு முனிவர் தம் மனைவியாருடனும் மாணவருடனும் உலாவப்போய் இரமணீயமான ஓர் இடத்தில் உட்கார்ந்தனர். மாணவர்கள் தத்தமக் கிஷ்டமானபடி காட்டில் திரிந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பது காரணமாக அயலில் பற்பல விடங்களுக்குச் சென்றனர். மிருகண்டு முனிவரும் மருத்துவதியாரும் தனிமையா யிருந்து தங்களுக்கு இஷ்டமானபடி சம்பாஷிக்க லானார்கள். அப்போது மிருகண்டு முனிவர் அதுவே தக்க சமயமென்று சில நாளாகத் தம்மனத்திற் குடிகொண் டிருந்த ஐயத்தைப்பற்றித்தையலாரைவினவலாயினர்.

மிருகண்டர் — அன்பிற் சிறந்த பாவாய்! அநேக நாளாக ஒரு விஷயத்தைப் பற்றி உன்னைக் கேட்கலாமென்று ஆவல்கொண் டிருக்கின்றேன். அதற்கு அடுத்த சமயம் இதுவே என்று எனக்குத் தோற்றுகின்றது.

மருத்துவதியார் — என் அருமைக் காதலரே! அடியாளிடம் கேட்க வேண்டிய விஷயமும் உமக்கொன் றிருக்கின்றதா? அதற்கோர் சமயமும் வேண்டுமா? யான் அடியா ளென்றும், நீர்

ஆண்டா ரென்றும் மனத்தின்கண் எண்ணமில்லை போலும்.

மிரு.—பெண்ணே! நீ சொல்லுவது சரியே. ஆயினும் எதையும் சமய மறிந்து செய்ய வேண்டுமல்லவா? அதுவே தவிர என் மனத்தில் வேறொரு வித்தியாசமு மில்லை

மருத்.—நாயகரே! அப்படியானால் தங்களுடைய மனத்தின் கவலை யொழிய உள்ளதை வெளியிட்டு விடுங்கள். இன்றேல் அது என் மனத்திற்குங் கவலை யுண்டாக்குமன்றோ, அதனை உடனே ஒழிப்பீராக.

மிரு.—கண்மணியே! சில நாள்களுக்கு முன்பு யான் ஓர் அயலகஞ் சென்று பொழுதுபட்டு வெகு நேரங் கழிந்து இல்லமேகி உன்னை யோர் மூலையில் தேடிக் கண்டபோது, உனக்கிருந்த முகவாட்டத்திற்கு நீ செப்பிய காரணம் எனக்கு மனத்திருப்தியைக் கொடுக்காவிட்டாலும், அது அமயமல்லவென்று உன்னைப் பீடிக்காமல் விட்டுவிட்டேன். அன்று நின் மனத்தாங்கலுக்கு நேர்ந்த காரணம் யாதோ, அதைச் சிறிதும் ஒளியாமல் செப்புவாயாக. விஷயம் பெரிதானதென்றே அன்று என் மனத்திற் பட்டது; என்ன சொல்லுகின்றாய்?

மருத்.—என தாண்டவரே! உமது மனத்திற் பட்ட சமுசயம் உண்மையே. அது சிறியது மன்று, பெரியதே. அதை யான் வெளியிட்டால் உமது வருத்தம் இன்னும் நீளுமே யன்றிக் குறுகாதே. அதற்காக அஞ்சுகின்றேன்.

மிரு. — பெண்கள் நாயகமே! அப்படிப்பட்ட ஓர் செய்தி உனக்கும் அவ்வாறு யிருக்கவேண்டு மன்றோ? அதை என் உள்ளம் தாங்குமோ. அது இருவருக்கும் இன்னலை இயற்றத்தக்கதாக விருக்க, அதை நீ வெளியிடும் பக்ஷத்தில் இருவர் மனத்திற்கும் ஆறுதலாக ஒரு பரிகாரம் செய்து கொள்ளலாமன்றோ?

மருத். — அன்பரே! பரிகாரம் செய்துகொள்வ தானால் இதோ வெளியிட்டு விடுகின்றேன். கேளும்: அன்றைத்தினம் அருந்தவ முனிவர் கள் பதின்மர் நமதில்லமேகி மாலைப்போது வரையில் தங்களது வருகைக்கு எதிர்பார்த்துக் கொண் டிருந்து, அதுவரையில் தாங்கள் வரா மையை நோக்கி, அடியாள் வருந்த, அனைவரும் பந்தி யுட்கார்ந்து உண்டி யெடுக்கும் சமயத்தில், அவர்களில் முதியோ ரொருவர் நமக்குப் புத்திர பாக்கிய முண்டோ வென்று வினவினர். அப் போது யான் மனக்கலக்கத்துடன் உண்மை யைச் சொல்ல, அவர் "புத்திரனில்லா அகத்தில் போனகம் கொள்ளோம்," என்று திடுக்கெனப் பந்தியைவிட் டெழுந்து போய்விட, மற்றவர் களும் அவரைப் பின்தொடர்ந்து போய்விட்ட னர். இந்தச் சம்பவமே அன்று முதல் இன்று வரை அடியாள் மனக்கவலைக்கும் முகவாட்டத் திற்கும் காரணமாயிற்று.

மிரு. — ஐயோ! என தருமைக் காதலியே! நமதில்லம் அவ்வளவு கேவலமாக எண்ணப்பட்ட தல்லவா? முனிவர்களை நாம் குறை கூறுவதற்கில்லை. நமது முன்வினைப் பயனையே நொந்துகொள்ள

வேண்டும். "வெறும்பானை பொங்குமோமேல்." புத்திரப்பே றில்லாதவர்கள் புண்ணியவான்க ளல்லரென்று புராண சாத்திரங்கள் கூறும். அத் தகையோர் சுவர்க்காதி போகங்களை அனுபவிப் பது அவலமே. நாம் இம்மைப்பயனை நோக்கா விடினும் மறுமைப்பயன் காரணமாகப் புத்திர சந்தானம் அடைய வேண்டிய தென்பது மறுக்க முடியாத தொன்றே யாகும். ஆயினும் அதற் குத் தக்கவாறு முன்வினைப் பயனும் மூலாதாரப் பொருளின் அருளும் நமக்கு முன்னிற்கவேண்டு மன்றோ? புத்திரப்பே றடைவதற்குத் தவத்தை யன்றி யாம் செயற்பாலது யாதுளது! கருணைக் கடலாகிய கங்காதரனை யன்றி நமக்குப் புத்திர பாக்கியம் பாலிக்கத்தக்கவர் வேறு யாவருளர்! "சிவத்தைப் பேணின் தவத்திற்கழகு;" அதுவே மனோபீஷ்டத்தை நிறைவேற்றத் தக்கது. ஆகை யின் அத் தவச்செயலுக்கு இன்னே செல்லு வோம். இறைவ னருள்புரிவார்.

மருத். — என் கருத்திற் கொத்த கணவரே! நமக்கு வேண்டுவன செய்ய விரிசடையானை யன்றி வேறொருவருமிலர் என்பது திண்ணம். நுமக் குத் தோன்றிய யோசனையே யோசனை. அப் பெருமான் அகனமர்ந்து நமதகங் குளிர்விப்பா னென்பதும் திண்ணம். அத் தவத்திற்கு அடியா ளாகிய யானும் வேண்டிய தொண்டுகள் கட்டளை யானல் புரியக் காத்திருக்கின்றேன்.

மிரு. — என் மன மொத்த மருத்துவதியே! அப் படியே செய்வோம். நமது மாணவர்களும்

இதோ வந்துவிட்டனர், இருக்கைக்கு ஏகலாம்,
உடனே தவத்திற் காரம்பிக்க வேண்டும்.

மிருகண்டர் இவ்வாறு தீர்மானஞ் செய்து கொண்டு முனிவர் யாவருடனும் இருக்கை யடைந்தனர். அன்றிரவு வைகறையிலே முனிவர் அயலிலுள்ள வனத்திற்குச் சென்று தாம் எண்ணிய கருத்து நிறைவேற விரதத்தை ஆரம்பிக்க லாயினர். காற்று, குளிர்-காற்று, வெயில், அக்கினிக் காற்று, மழை, சோனமழை, பனி, மூடுபனி ஆகிய துன்பங்களொன்றுக்கு மஞ்சாமல், வைராக்கிய மிஞ்சி, சித்தத்தைச் சிவன்பாலே செலுத்தினராய், அவர் இருதுக்களிலெல்லாம் இடைவிடாது மனத்தை ஓர் வழிப்படுத்தி, மைந்தன்வேண்டு மென்னும் நோக்கத்தையே ஆங்கண் பதியவைத்து, ஒரு வருஷகாலம் ஓய்வென்ப தில்லாமல் ஒப்பற்ற தவம் புரிந்தார். வேண்டியார் வேண்டியாங்கு அருளைப் பாலிக்கும் கருணைக் கடலாகிய சிவபெருமான், மிருகண்டு முனிவருக்குப் பிரசன்னமாகி, "நண்பனே, உனது அருந்தவத்திற்கு அகமகிழ்ந்தோம். நீ வேண்டி நிற்பது யாது?" எனலும்; முனிவர், "அடியேங்கட்குப் பிள்ளைப்பேறு அருமையாய் விட்டபடியால், அயலகத்து முனிவர்களுடைய ஏளனத்திற்கு ஆளாயினேம்; தவிர, மறுமைப் பயனையும் இழந்தவ ராயினேம். ஏக நாயகனே! எங்கள் மனத்தில் குடிகொண்டிருக்கும் ஏக்கத்தைத் தீர்க்குமாறு எங்களுக் கோர் புத்திர னுண்டாகக் கடைக்கணிப்பீராக. இதுவே எமது கோரிக்கையும் வேண்டுகோளுமாம்," என்று பசுபதியின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தனர்.

சிவபெருமான் — அன்பனே! உனக்கு ஒரு நூறு வயதுடைய புத்திரன் வேண்டுமா? பதினாறு வயதுடைய புத்திரன் வேண்டுமா?

மிருகண்டர் — ஆண்டவரே! உலகத்தார் பிள்ளைகள் வயதோடிருக்கவன்றோ விரும்புவார்கள்?

சிவ. — முனிவ! அப்படியானால் வயதோடு கூடிய நோய் நொடியுள்ள பிள்ளையைப் பெற்றுக்கொள்ளப் பிரியந்தானா?

மிரு. — பவப்பிணி யறுக்கும் பார்ப்பதி நாயகரே! 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்கின்றார்களே!

சிவ — தவசியே! நோய் நொடி யில்லாத பிள்ளையாக இருந்தால் அவன் வயதோ டிருக்கமாட்டான்.

மிரு. — எல்லாம் வல்ல இறைவனே! ஒன்றுலொன்று குறைவில்லாமல் பூரண ஆயுசுடைய புத்திரன் ஒருவனை யான் அடைய அருள் செய்யலாகாதா?

சிவ. — அன்ப! வயதிற் குறைந்தவனும், குணத்தில் நிறைந்தவனும், நோய் நொடி யற்றவனும், அழகு மிக்குற்றவனுமாகிய, அருமை மைந்தன் ஒருவன் வேண்டுமோ? அல்லது, முழுவயதுடையவனும், மூடனும், நோய் நொடி மிக்கவனும், பார்ப்போர் அருவருக்கத் தக்கவனுமாகிய அழகில்லாத பிள்ளை யொருவன் வேண்டுமோ? எவன் வேண்டும்?

மிரு. — அறிவுக் கறிவே! உமது இஷ்டத்திற்கு மாறாக எதுவும் கேட்க அஞ்சுகின்றேன். மண்ணிலும் விண்ணிலும் உமது செயலின் தன்மையை உள்ளபடி அறிந்தவர் எவரு மிலர். ஆன்மாக்களுக்கு

உரியன இவையென்று நீரே யறிவீர். தக்கது செய்வது உமதருட்டிறம். ஆகையின் கிருபாநிதியே! எத்தகைய புத்திரனை அடியேங்களுக்கு அருளினும், அவன் உம்மைக் கனவிலும் மறவாத மைந்தனாக விருந்தால் அதுவே எங்களுக்குப் போதும், அருள் செய்வீராக.

சிவ. — தபோதனனே! பதினாறு வயது படைத்து, எம்மீது பத்தி குறையாத நற் புத்திரனொருவனைத் தந்தோம், அகத்துக் கேகி அகமகிழ்ந்து வாழ்வாயாக.

இதனுடன் சிவபெருமான் மறைந்தருளினர். மிருகண்டர் மனத்திலேயே சிவபெருமானைத் தோத்திரம் செய்துகொண்டு இருப்பிடம் திரும்பினர். ஆங்கு மனைவியாருடன் வனத்தில் நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் சொல்லி அன்றுமுதல் அகமகிழ்ந்து, சிவபெருமான் அருளைப் புகழ்ந்து, புத்திர சந்தானத்தைப்பற்றி அல்லும் பகலும் அனவரதமும் எண்ணிக்கொண்டு இல்லறத்தை இயற்றிவந்தனர்.

இவ்வாறு ஒரு வருஷகாலம் கழிவதற்குமுன் மருத்துவதியார் ஒரு புத்திரனைக் கருவுயிர்த்தார். மிருகண்டர் மிக மகிழ்ச்சியுடன் தான தருமங்கள் செய்தனர். குழந்தை வடிவழகிற் சிறந்து உலகம் உய்ய வந்ததுபோல் காணப்பட்டது. அதன் மேனி பார்த்தவர்களுக் கெல்லாம் பரமானந்தத்தைக் கொடுத்தது. மிருகண்டர் அதற்குச் செய்யவேண்டிய அன்னப்பிராசன முதலிய சடங்குகளை உரிய காலங்களில் அவ்வப்போது செய்து முடித்தனர். குழந்தை நாளுக்குநாள் புதுமேனியும் புதுவண்ணமுங் கொண்டு

மகாபரிசுத்தமாய் வளர்ந்து தக்க வயது வர, அதற்கு முனிவர் உபநயனமும் செய்து உவந்தனர். பிள்ளையும் ஐந்து வயதிலேயே அக்ஷராப்பியாசம் செய்யப்பெற்றுப் பல கலைகளையும் ஓதி, பாரிய புத்தியையும் சீரிய ஒழுக்கத்தையும் சிவபெருமான்மீது சிறந்த அன்பையும்கொண்டவனாயினன். தாயும் தந்தையும் தமது தவச்செல்வனது நற்குண நற்செய்கைகளை யெல்லாங் கண்டு மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியிருந்தனர்.

## IV. தவப்பேறு

"தவமும் தவமுடையார்க் காகும்"

இந்தப் பாலகனுக்குப் பெரியோர்கள் இட்ட பெயர் மார்க்கண்டன் என்பர். இவர் பாலப்பருவமடைந்து பல கலைகளிலும் தேர்ந்து, பார்ப்பவர் யாவருக்கும் பரிசுத்த வாலிபனாகக் காணப்பட்டார். மாணவனாய்ப் படித்தலினும், மைந்தனாய்ப் பணிதலினும், தன்னையொப்பார் பண்டும் இன்றும் என்றும் இல்லை யென்னும் பெயரை நிலைநாட்டினார். இவர் கல்வி ஒழுக்கங்களைக் கருந்தனமெனக் கைக்கொண்டார். காலை மாலை நூலை ஓதுதலும், மற்ற நேரங்களில் மாண்புடையர் தங்கள் குழாத்தில் கூடி அளவளாவியிருந்து அருமறைகளை ஆராய்ச்சி செய்தலும், நேரம் வேளை யென்பதில்லாமல் எப்போதும் கனஞ்சடையோன் புகழைக் கருத்தில் வைத்துத் தியானித்தலுமே தமது இடையறாக் கடமைகளாகக் கொண்டொழுகி, எல்லோருக்கும் நலத்தையே நாடி வாழ்வார். இப்படிப்பட்ட ஏற்றம்பொருந்திய தமது தநயர் செய்கைகளைக் கண்ணாரக் கண்டு காலங்கழித்துக்கொண்

டிருந்த ஓர் தன்மையில் மிருகண்டரும் மருத்துவதியாரும் மைந்தனுக்கு ஆயுள்பாகம் குறைந்திருக்கின்ற அப்பரிசை அறவே மறந்தனர்.

இவ்வாறு ஒழுகு நாட்களில் அகஸ்மாத்தாக அன்னையின் மனத்தினில் அவ்விடயம் தோன்றிற்று. மருத்துவதியார் மைந்தனைப்பற்றி வெகுவிசனமுற்றுப் பர்த்தாவைக் கண்டு பலமொழிகளுக்குள்ளே ஒரு மொழியாய்த் தமது ஒப்பற்ற மைந்தனின் வயதுப் பிரமாணத்தைப்பற்றி வெளியிட்டார். மிருகண்டர் திடுக்கென வெழுந்து தமது மனைவியாரை நோக்கி "மாதரசே! மறந்தோமல்லவா இதனை. இதுவும் அவன் செயலே யாகும். ஆன்மாக்களின் நன்மை தீமைகளுக் குரியவைகளை நன்கறிவான் அவனே யன்றோ! சிவபெருமானது திரோபவசக்தி யில்லா விடில் இப்பிரபஞ்சம் என்னபாடு படும்!"

இப்படி மிருகண்டர் தமக்குத் தோன்றியதைச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, மருத்துவதியார் வாய்திறந்து கோவென்றலறிக் கண்ணீர் ததும்பித் தாரை தாரையாய் ஒழுகக் கலுழலாயினர். இதைக் கண்ட மிருகண்டு முனிவர் அவ்வாறு கதறியழும் காதலியை நோக்கி "என் கண்மணியே! திடீரென்று இவ்வாறு புலம்புவதின் காரணமென்னோ? பெண்களைப் பேதையரென்கின்றார்களே! அதற் குதாரணம் நீயே யானாய். அவனருள் அற்றபோதன்றோ நாம் குறைவுற்று வருந்தவேண்டும். ஆபத்பாந்தவனாகிய அவன் எப்போதும் நமக்குத் தோன்றாத்துணையாயும் தோன்றுந் துணையாயும் நிற்கக் குறையொன் றுள

தாமோ? நின்னழுகையை நிறுத்துக,'' என்று ஆறுதலான வார்த்தைகளைத் தமது கணவர் ஆதரவுடன் சொல்லியும், மருத்துவதியார், நிறுத்தாமல் அழுதுகொண்டேயிருந்தார். அதைக்கண்ட முனிவரும் கண்ணீர் உகுத்துச் சிந்தாகுல முடையரானார்.

அன்னையுந் தந்தையும் இவ்வாறு சச்சரவு படுவதால் அருகே ஆராய்ச்சியில் பதிந்த மனமுடையவராக விருந்த மார்க்கண்டருக்கும் மனம் கலங்க, அவர் அவசரமாகத் தம் பெற்றோரை யணுகி "இக்கலாத்துக்கு யாது காரணம்,'' என்றனர். அப்போது அன்னையாரும் மைந்தனைக் கண்டவுடனே அழுகையைச் சிறிது நிறுத்த, ஆங்கணிருந்த அருந்தவமுனிவர் மார்க்கண்டரை நோக்கி "மைந்தனே! இவ்வாறு நேர்ந்ததற்கு இசைந்த காரணத்தை யெவ்வாறெடுத்துரைப்பேன்! எவ்வண்ணம் மனந்துணிவேன்! இறைவன் செயல் யாதோ! அப்பா, யாங்கள் மகப்பேறு வேண்டி மலைமகள் மணாளனை நோக்கி மகாவிரதமிருந்து அப்பெருமானைக் காணும் பெரும்பாக்கியத்தைப் பெற்றபோது, அப்பரமன் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்காகிய ஒருவாக்குண்டு: அதாவது, ஐயோ! மைந்தா! உனக்கு வயது பதினாறே! யென்பதே. அப்பருவத்துக் கணித்தாய் நீ இப்போது இருக்கின்றபடியால், அதுவே இக்குழப்பத்திற்குக் காரணமாயிற்று. அதனாலேதான் நாங்கள் இருவேமும் விசனத்திற் காளாயிருக்கின்றோம்,'' என்று சொல்லிக்கொண்டே தாமும் வாய்விட்டலறலாயினர்.

தமது ஆயுட் குறைவைத் தந்தையின் மூலமாயறிந்த மார்க்கண்டருக்கு மனம் சிறிதுங் கலங்க

வில்லை. பெற்றோர் அழுவது பெரும்பேதைமையே எனக்கொண்ட அவர், அவர்களை நோக்கி, "பசிலையைக் கையிற் பிடித்துக்கொண்டு பாம்பு கடித்த தற் கிரங்குவார்களோ? கிருபை பாலிக்கப் பெருமானிருக்க இப்பெருந்துக்க மேதுக்கு? தவத்திற்குச் சென்று தக்கபடி பரிகாரம் தேட அடியேனிருக்கின்றேன். அத்தவத்தை முடிவுகாணச் செய்து முழுப் பலனளிக்க மும்மூர்த்திகளுக் கெல்லாம் ஒரு மூர்த்தியாகிய முதல்வனிருக்கின்றார். யான் இதோ தவத்துக்குச் செல்லுகின்றேன். நீங்கள் நுமது மனக் கவலையை இந் நிமிஷத்தோ டொழித்து இனிமையாகக் காலங்கழியுங்கள். போய் வருகிறேன்," என்று புறப்பட்டு ஆச்சிரமம் விட்டகன்றனர்.

மார்க்கண்டர் பெற்றோரிடத்தினின்றும் புறப்பட்டுத் தெற்கே வெகுதூரம் நடந்து சென்று, இப்போது திருக்கடவூர் மயானம் என்று சொல்லப்பட்ட பலவகையான மரங்களடர்ந்த வனத்தின்கண் வந்து சேர்ந்தார். அவ்விடத்தில் அவர் இலிங்கத் தாபனம் செய்து வைத்து அல்லும் பகலும் அரனைப் பூசை செய்வாராயினர். அப்பூசையினு லுண்டாகிய அக்கினிச் சுவாலை அக் காடெங்கும் வீசிக்கொண்டிருந்தது. எத்தேவர்களும் அவ்விடத்தைக்கண்டு அஞ்சிப்போயினர். இவ்வாறு மார்க்கண்டர் சில மாதங்கள் சிவ பெருமானுக்கு அரும்பூசை செய்து, பெருந்தவ மியற்றினர். அதற்கு உளமுவந்த அர்த்தநாரீசுவரர் அம்மைந்தராகிய மார்க்கண்டருக்கு அணித்தாய்த் தோன்றி, "அருமை மைந்தனே! நீ விரும்பியதை யறிவோம். உன்னுடைய பூசனையை இடைவிடாது செய்துகொண் டிருப்பாயாக. இயமனும் இயம தூதர்

களும் இவ்விட மணுகார்கள் ; அணுகினும் அவர்கள் கதி வேருகும்" என்று கூறி, மறைந்தருளினர். அந் நிமிடந்தொட்டு மார்க்கண்டர் தமது பூசனையை விடாது புரிந்துகொண்டு அவ்வடவியிலேயே தங்கி யிருந்தனர்.

## V. கால காலன்

"தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்ருறுக்கும்"

பூலோகத்தின்கண் மிருகண்டு முனிவர் புத்திரரா கிய மார்க்கண்டர் மகேசுவரனை நோக்கி மகா அற்புத மாகிய அகோரதவஞ் செய்துகொண் டொழுகும் நாளிலே, உம்பரின் கண்ணுள்ள இயம லோகத்திற்கு அதிகாரியாகிய அறக்கடவுள் ஒருநாள் தமது சித்திர குத்தர்களை அழைத்து, அந்நாள் ஆயுள் முடிவெய் தும் ஆன்மாக்களின் தொகைகளை வகைப்படுத்தித் தெரிவிக்கக் கட்டளையிட, அவர்கள் அவ்வாறு கணக் கைப்பார்த்துச் சொல்லிக்கொண்டே வந்து, கடைசி யாகப் பதினறு வயதெல்லையடைந்த மார்க்கண்டன் பெயரையும் எடுத்தோதினர். அதுகேட்ட இயமன் பல தூதர்களைப் பல விடங்கட்குப் போக்கி, தூதர் களுக்குத் தூதனகிய காலன் என்பவனை நோக்கி, "காலனே! தண்டகாரணியத்தின் தென்பால் ஓர் அடர்ந்த வனத்தின்கண் மிருகண்டு புத்திரன் மார்க் கண்டன் என்பான் வைராக்கியத்துடன் சிவபூசை செய்துகொண் டிருக்கின்ருன். அவனுயுள் நாள் இன் ருேடு முடிவாகும். நாளை நீ அதிகாலையிற் புறப்பட்

டங்குச்சென்று அவனை அழைத்துக் கொண்டுவந்து நம் மெதிரே விடக்கடவாய்,'' என்று கட்டளையிட்டனுப்பினான்.

இயமனிட்ட கட்டளையின்படியே காலன் என்னுந் தூதன் அவ்வனத்திற்குச் சென்று மார்க்கண்டரைக் கண்டு எதிர்நோக்கி நிற்றலும், மார்க்கண்டேயர் அவனைக் கண்டு, "நீ யார்'' என அவன், "யான் இயம தூதர்களில் முதலானேன். உமக்குப் பதினாறு வயதெல்லை நேற்றே கடந்தது. இனி நீர் இயமபுர மடைதல் வேண்டும்,'' என்றான். அதைக் கேட்ட மார்க்கண்டர் அக்காலனை நோக்கி, "காலனே! சிவபெருமானுக்கு அன்பராயுள்ளோர் இயமலோகத்திற்கும் வாரார்கள்; இந்திரலோகத்திற்கும் போகார்கள்; எவ்வுலகிற்கும் மேலாகிய சிவலோகத்தையே சேருவார்கள். யானோ அப்பெருமானுடைய அடியார்க்கடியவன். யான் இழிவான பதங்களை விரும்பேன், இயமலோகத்திற்கு வாரேன்; சிவபெருமானிடத்தே சென்றிருப்பேன். ஆகையால் நீ சீக்கிரமே போய்விடு, இங்கு நில்லாதே; நிற்பையேல் கதிவேறாகும்,'' என்று அஞ்சாமல் அறைந்து சொல்ல, காலன் நடு நடுங்கி ஓடோடியும் போய் உற்றதை நமனிடம் தெரிவித்தான்.

அதுகேட்டதும், இயமன் உள்ளம் பதைத்து உடலம் வெயர்த்துக் கண்கள் கனல் பொழியச் சிவந்து, புருவங்கள் நிமிரக் கோபங்கொண்டு, எருமைக்கடாவின்மீது இவர்ந்து, பல காலதூதர் தன்னைச் சூழ்ந்து வர, கடவூர்க் காட்டிற்குக் கடுகிச் சென்று, மார்க்கண்டன் பூசை செய்யுமிடத்திற்குப் போய், தனது

செம்மை மயிரும், கருமைச் சரீரமும், அக்கினிக் கண்களும், பாச சூலங்களேந்திய கையும், ஆகிய இவைகள் மார்க்கண்டர் கண்ணுக்குத் தோன்ற எதிர் சென்று நின்றான். மார்க்கண்டர் இயமனைப் பார்த்து, அவன் செய்கையை நோக்கிச் சிந்தித்து, சிவபெருமான் திருவடிகளைத் தமது இருதயத்தில் வைத்து வணங்கித் துதித்து, தம்பாட்டுக்குப் பூசை புரியலாயினர்.

இயமன் — மிருகண்டு மைந்தனே! நீ செய்வதியாது? நின் னிலைமையை நீ யறியாய் போலும்!

மார்க்கண்டர் — யான் செய்கின்றது சிவ பூசை; என் னிலைமையோ சிவ னடியார்களுக்கு அடியவனா யிருத்தல்.

இய. — உனக்கு அச் சிவபெருமான் தந்த ஆயுளெல்லை ஆண்டு பதினாறன்றோ? அது நேற்றோடு முடிந்தது. இன்று நீ எம்மோடு வரற் குரியை.

மார். — சிவனடியார்கள் சிவ பெருமானோடு இருத்தற்குரியரே யன்றி உன்னோடு வரற்குரிய ரல்லர்.

இய. — மிகப் பெருந்தவஞ் செய்து மேன்மை யுற்றோர் எல்லோரையும் யாமே கொண்டுபோய் எமலோகஞ் சேர்த்து, அவரவர்களைத் தக்க பதவியிற் கொண்டுய்ப்பேம். அதுபோலவே நீயும், இன்று எமது புரமடைந்து, பிறகு உனது பூசாபலத்தின்படி புண்ணிய லோகங்களிலொன்றைச் சேரவேண்டும். உடனே புறப்படு.

மார். — உண்மைச் சிவ னடியார்கள் உன்னுடன் கூட வரவே வரார்; சிவ பெருமானே அவர்களுக்கு

நாயகன்; அவர் அவன் கொண்டிருக்கும் இடமே சேர்வர்.

இய. — மைந்தனே! நீ சிவனடியான் என்கின்றாய், சிவ பூசை செய்கின்றாய். ஆகவே நீ சிவாக்கினை கடந்து நடக்கலாமோ? அப்பெருமானே உனக்களித்த ஆயுள் நேற்றே முடிந்ததல்லவா? ஊழ்வலி அறியாய் போலும்!

மார். — உமாபதியின் ஊழியர் ஊழையும் உப்பக்கங் காண்பார். அவன் அருள் உற்றால் அதன்வலி அற்ற தன்றோ?

இய. — அறியாது செப்புகின்றாய். இறப்புப் பிறப்புக்கள் யாவருக்கும் பொருந்தும். இது பெருந் தவத்தோருக்கும் இயலும். நீ செய்யும் சிவ பூசை உன் பாவத்தைப் போக்குமேயன்றி என் பாசத்தை நீக்குந் திறனுளதன்று.

மார். — இமயவதி நாயகன் அடியவர்களுக்கு இறப்பென்பதிலது. நீ செய்வது வீண்வாதம். என்னைக் கொண்டுபோவதற்கு உன்னால் இயலாது. உனது பிடிவாதம் இங்குச் செல்லாது. நன்மையாகவே செல்க. தீமைக்கு எதிர் பாராதே.

இய. — அறியாப் பிள்ளாய்! அவசரப்படாதே. எதையும் ஆலோசித்துச் செய்யவேண்டும். மும் மூர்த்திகளுக்கும் பிறப்பிறப்புண்டு. அது உனக்கும் உண்டு, எமக்கும் உண்டு. எதிர் வாதம் பேசாதே. எம்முடன் வா.

மார். — அறக்கடமை அறியாத அந்தகனே! நீ ஏதோ கலகத்துக்குத்தான் கால் வைத்துக் கொண்டு

வந்திருக்கின்றாய்; அடாது செய்கின்றாய், படாது படுவாய், பதைக்காதே. வந்த வழியைக் கண்டு செல்க.

இய. — பேதைப் பிள்ளாய்! உனக்குப் பேய் பிடித்ததோ! பித்தேறியதோ! நீ உன் ஆயுள் நாட்களைக் கடந்துய்ய மூட முயற்சி செய்தாலும், சிவ பெருமான் இட்ட கட்டளையை யான் மீறுவேனோ? முழுமூடனே! உன்னைத் தேவரே காப்பினும், யாவரே காப்பினும் யான் இன்று உன் உயிர் கொண்டன்றி மீளேன். சிவனடியாரையும் ஆயுள் முடிவில் எமதிடமே கொண்டு செல்வேம். இது திண்ணம். முன் பின் யோசித்துப் பேசு. பிள்ளைத் தன்மையிற் கிடந்துழலாதே. பதறாமல் எம்முடன் வா, தக்க பதவி யடைவாய்.

மார். — இயமனே! நீ யான் சொல்வதையும் கேளாய், சொந்த புத்தி கொண்டும் பாராய். இப்போதாவது யான் இயம்புவதைப் பொறுமையுடன் செவியில் ஏற்பாயாக. ஆயுள் முடிவென்பது ஆதிபகவனாகிய சிவபெருமான் அடியவர்க்கில்லை. உண்டேனும் அவர்கள் உன்னுடன் வருவதென்பது சிறிதுமில்லை. அவர்கள் அப்பெருமான் வெள்ளிமலைக்கே விமானமேறி விமரிசையாய்ச் செல்வர். அவர்கள் இருடிகளாயினும் இல்வாழ்வார்களாயினும் செல்வனாகிய சிவபெருமானது சிறந்த சைலத்தையே சார்வர். அவர்கள் உன்னையொத்த இந்திரன் முதலிய தேவர்களை மதியார்கள். சிவபெருமானுக்கும் அவர் தம் அடியவர்களுக்கும் வேற்றுமையுண்டெனல் விபரீத அறிவே. அவர்கள் ஜீவன்

முத்தர்களாய் இவ் வுலகின்கண்ணே யிருந்து மோக்ஷ வின்பத்தை எக்காலும் அனுபவிப்பார்கள். அவர்களுக்கு யாதொரு தீமையும் நேராது; நேரினும் அது சூரியன் முன் பனி போல் இருந்த இடமும் தெரியாமலொழியும். அவர்கள் மகிமை அளவிடற் பாலதன்று. அவர்களது அருமையை நீ அறியாமல் அவர்களையும் மற்ற உலகத்தவரைப்போல் மதியீனமாய் மதிக்கின்றாய். அவ் வடியவர்களுக்கு அடியவனாகிய எனக்குத் தீங்கு நினைக்கின்றாய். உன்னுடைய அதிகாரம் இன்றோடே அழிதற்கு அடிகோலிக்கொள்கின்றாய். மேல் வருவதறியாய், மூடர்க்குமூடனே! தூரப்போ, என் முன் நில்லாதே.

இவ்வாறு சொல்லக் கேட்ட இயமன் மகா உக்கிரமாகிய கோபங்கொண்டு பற்களை நற நற வென்று கடித்து, "இவன் என்ன நம்மைப் பயமுறுத்துகின்றான். இவன் அவ்வளவு வலிவுள்ளவனா? இவனது உயிரை யாம் கொண்டுபோக மாட்டோமென்று மனத்திற் கொண்டான் போலும்; பார்ப்போம் இவன் சாமார்த்தியத்தை," என்று சொல்லிக் கொண்டு இடியேறு போல ஆர்த்து, நீலமலைபோல மார்க்கண்டர் முன் நின்று, தனது பாசத்தை வீசி யெறிந்து, அவரைப் பலமாகப் பிடித்து இழுத்தான். அப்போது மார்க்கண்டர் சிவபெருமானது துணைப் பாதங்களைத் தமது இருதயத்தின்கண் இறுகப் பிடித்துக்கொண்டு, "ஈசனே! கைலைவாசனே! கங்காதரனே! நீலகண்டனே! நிர்மலரூபனே! சோதி வடிவே! சுயம்புவே!" என்று தோத்திரஞ் செய்து,

தியானித்து, "இவ்வியமன் செய்கை இருந்தவா றென்னே!" என்று மனத்தின் கண்ணே மதித்து மனங் கொதித்து நின்ருர்.

அந் நிமிஷத்திலேயே ஆங்கு நின்ற சிவலிங்கம் படீரென்று வெடிக்க, அதனின்றும் திரிபுராந்தகரா கிய சிவபெருமான் தோன்றி, இருவருங் காண நின்று மார்க்கண்டரை நோக்கி, "மைந்தனே! உனது இன் னலை இன்னே ஒழிக்கின்ருேம், அஞ்சாதே! மதத்தி ஞல் இவ் வியமன் உன்னுயிரைக் கொண்டுபோக வெண்ணினன்," என்று திருவாய் மலர்ந்தருளி, இயமன் மீது கோபங்கொண்டு, தமது இடப்பாதத்தி ஞலே அவனை உதைத்துத் தள்ளினுர். அவ் வுதை யுடன் இயமன் பூமியின் கண் சாய்ந்து மாய்ந்தான். அவனது தூதர்களும் எருமைக் கடாவும் இருந்த இடத்திலேயே விழுந்து இறந்தனர். அப்போது சிவ சிந்தையில் ஆழ்ந்த மனத்துடனிருந்த மார்க்கண் டரை நோக்கிச் சிவபெருமான், திருவுளத்தில் பெரு மகிழ்ச்சி யடைந்து, "மைந்தனே! நீ எம்மை உண்மை யன்போடு உபாசனை செய்தமையால் யாம் உனக்கு என்றும் பதினுருக முடிவிலா ஆயுளைத் தந் தோம். நீ சிரஞ்சீவியாய், சீவன் முத்தனுய், இவ் வுல கின் கண்ணே எக்காலமு மிருந்து, பற்பல வுயிர்களுக் கும் பரமானந்தத்தை விளைவித்துக்கொண்டு, நம்மீது வைத்த அன்பை எந்நாளும் மறவாமல், இன்பமே அனுபவித்துக்கொண் டிருப்பாயாக," என்றருளிச் செய்து அந்தர்த்தானமாயினுர்.

## VI. மாண்ட மகன்

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி
இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னுஞ் சொல்"

மிருகண்டு முனிவரும் மருத்துவதியும் மைந்தனது எண்ணமே எப்போதும் மனத்திற் குடிகொண்டிருக்க, மகேசுரனது தயவும் கிருபையும் என்றைக்குக் கிடைக்குமோ வென்று கவலை யுற்ற வண்ணமிருந்தார்கள். வழக்கப்படி ஒரு நாள் தம்பதிகளிருவரும் சாவகாசமாக இருந்துகொண்டு தநயனைப் பற்றிச் சம்பாஷிக்கலானார்கள்.

மருத்துவதி — என் பிராண நாயகரே ! நமது மைந்தன் காண்பதற்கரிய சிவபெருமானைக்கண்டு, பெறற்கரிய பேற்றினைப் பெற்றிருப்பானோ ?

மிருகண்டர் — பிராண நாயகி ! அதைப்பற்றி உனக்கேதாவது ஐயமுண்டோ ? முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார் — என்பது இன்றைக்குப் பிறந்த வாக்கோ ? முயற்சி ஊழையும் உதைத்துத் தள்ளுமல்லவா ?

மருத். — அன்பரே ! எதற்கும் அவனருள் வேண்டுமன்றோ ? அஃதுற்ற ஞான்றே அவலக்கேடுகள் அற்றுப்போகும். பெருமான் அருளைப் பிள்ளையாண்டான் பெற்றிருப்பானோ வென்றுதானே கேட்டேன்.

மிரு. — பாவாய் ! நீ கேட்கினும் கேளாவிடினும் நடந்தது நடந்ததே. நமது மைந்தன் அமலனருள் பெற்று அருமைப் பேறுற்று நம்மை அதி

சீக்கிரத்திலேயே யடைவன்; இதற்கோ ரைய மின்று.

மருத். — ஐயரே! பொறும்! அதோ வருகிறது யார்? நமது மார்க்கண்டன்தானே.

மிரு. — சேயிழையே! செவ்வையாய்ப் பார். நீ சந்தேகமே பெரிதுங் கொண்டிருக்கின்றாய். உனது கண்ணை நீயே நம்பவில்லை!

மருத். — என்னறிவே! அவன் தான்! அவன் தான்!! நீரும் பாரும்!

மிரு. — பெண்மணியே! நான்தான் முன்னரே கண்டு விண்டேனே. இதோ வந்து விட்டான்! எழுந்திரு! எழுந்திரு!!

மருத். — என் கண்மணி! வாராய்! வாராய்! காலலம்பிக்கொள்! கடுக அமர்ந்திடு!

மிரு — மார்க்கண்டா! இன்று காலையில் எங்கிருந்து புறப்பட்டு வருகின்றாய்? பொழு தேறிவிட்டதே! எங்கே யாகிலும் சிறிது தங்கி வருதலாகாதா?

மருத். — பிராண நாதரே! எல்லாம் கேட்டறிந்து கொள்ளலாமே; என் அவசரம்? மைந்தன் வந்தாயிற்று. அவனுக்கு வேண்டியதைச் செய்வோம்.

மிரு. — சரி, மார்க்கண்டா! ஏதாவது உணவு கொள்ளலாமோ? களைப்பா யிருக்கின்றாயல்லவா?

மருத். — பாயாசமும், பாலுமிருக்கின்றது; பழங்களும் சில விருக்கின்றன. வேண்டியதைக்

கொள்ளலாம்; என்ன சொல்லுகின்றாய், அப்பா மார்க்கண்டா!

மார்க்கண்டர் — எனக்குப் பசியில்லை, உமக்கு வேண்டுமானால் கொண்டுவாருங்கள், அருந்துவதற்கு ஆக்ஷேபமில்லை.

மிரு. — எங்கள் கண்ணிற் கருமணியே! பெற்றோருக்காகவா போஜனம் கொள்ளப் போகின்றாய்? உன்பாட்டிற்குப் பசியில்லையோ? அருளமிர்தம் நிறைந்திருக்கின்றதோ!

மார். — அன்னையே! தந்தையே! அதற்கென்ன சிறிதும் ஐயமில்லை. அருட்கடலுண்டு தேக்கித் திளைத்திருக்கின்றேன்.

மிரு. — மனத்துக் கொத்த மைந்தனே! மஹா சந்தோஷம், கோரிக்கை ஈடேறியது தானே?

மார். — முனி புங்கவரே! முன்னவனே முன்னின்றால் முடியாததொன்றுளதோ!

மிரு. — பத்தியிற் சிறந்த புத்திரனே! பதினாறு என்னுங் கணக்குப் பறந்து போயிற்றன்றோ!

மார். — பிதாவே! பதினாறும் பறந்தது, பகடேறியும் இறந்தான்.

மருத். — என்னருமைக் கண்மணியே! இயமனா இறந்தான்?

மார். — என் மனமுவந்த மாதாவே! இத்தரையின் மீது இன்னும் பிணமாய்த்தான் கிடக்கின்றான்.

மிரு. — அருட் செல்வமே! அவனது அடாத செய்கை யாது?

மார். — செல்வத் தந்தாய்! சிவபெருமான் அருள் பெற்றவர்களைச் சீறிச் சினந்ததே போதாதோ?

**மருத்.** — மகிமை பெற்ற மைந்தனே! நீ இயமனுக்கு இயமனைப் போலும்! என்னே! நம்பெருமான் இன்னருள்! ஆக்குமோர் கை, அழிக்குமோர் கை!

**மிரு.** — பசுபதி பாலா! இயமனிறந்தால் என் பாடு படும் இவ்வுலகு! இனி நேருவ தியாதோ!

**மார்.**— பெறற்கரிய பிதாவே! அதற்குப் பரிகாரம் கால காலனை கண்டறிவன். அவரா லாகாதது முளதோ?

**மருத்.** — என் அன்பிற்குரிய அருந்தவரே! அதைப் பற்றி நமக்கேன் கவலை. அது நம்மாலாகிய காரியமா? இறைவன் இச்சையில் எதுதான் படாது. தேவனே யாயினும் யாவனே யாயினும் படவேண்டியதைப் பட்டுத்தானே தீர வேண்டும்.

**மிரு.** — தவத்தின் தவமே! நின் தவப்பேற்றின் வரலாற்றை நின் பெற்றோர்க்குச் சிறிது செப்புவாயாக. யாங்கள் அதைச் செவியாரக் கேட்க விழைகின்றோம்.

**மார்.** — குரவர்களுட் சிறந்தவர்களே! யான் தவஞ் செய்து பெரும் பேறு பெற்றுவந்த வரலாற்றைக் குறிப்பிக்கின்றேன். நீங்கள் உமதிஷ்டப் படியே கேட்டு உவப்புறுவீர்களாக. யான் இங்கிருந்து புறப்பட்டு இடை வழியில் அநேக காவதங்கள் காட்டைக் கடந்து சென்று கடவூர் வனமடைந்து சிவ லிங்கந் தாபித்து, சிவ பெருமானை நோக்கிச் சிறப்புடன் சிலகாலம்

பூசனை புரிய, அப் பெருமான் அடியேன் கண்களுக் கிலக்காய் ஆதரவான சொற்கள் சில அறைந்து மறைய, யான் அப் பூசனையை விடாது இயற்றிக்கொண்டிருக்க, இயம தூதர்களில் முதலாவான் தோன்றி இனிய மொழிகளால் அடியேனை அழைக்கவும், யான் அவனுடன் செல்ல மறுக்க, இயமனே எருமைக்கடா வேறி எதிர் வந்து பாச சூலங்கொண்டு, என்னைப் பயமுறுத்தி யழைக்க, யான் அவனுக்கு வேண்டியதெல்லாம் சொல்லியும் அவன் விடேன் என்று பாசம் வீச, உடனே பசுபதி தோன்றி அன்னோனைத் தமது இடக்காலால் எற்றித் தரையின் கண் வீழ்த்தி, எளியேனுக்கு "என்றும் பதினாறு" என்று வரந் தந்து ஏகியபின், யான் புறப்பட்டு வந்து உங்களுடைய இன்முகங் கண்டு மகிழலானேன்; எனது வரலாறும் ம்பெருமான் அருட்டிறமும் இதுவே.

மருத்.—அப்பா மகனே! அருந்தவப் பேறே! எப்பொருட்கு மிறைவனைக் கண்டு களித்த என்னருமைச் செல்வனே! சிவபெருமானது சிறந்த அருளைப் பெறுவதற்குக் கொடுத்துவைத்த உன்னைப் பெறுவதற்கு யாம் என்ன தவஞ் செய்தோமோ! இதை விட யாங்கள் பெறும் பேறு வேறுளதோ! உன்னாலன்றோ யாங்கள் கிருதார்த்தர்களானோம். மனக்கவலை யொழித்த மைந்தனே! நீ மகிழ்ச்சியாய் இம்மகிதலத்தின்கண் நீடூழி வாழ்ந்து நின்மலன் திருவடிகளை நினைந்துகொண்டே யிருப்பாயாக.

மிரு.— பெற்ஞேர் மனத்தைப் பெரிது முவக்கச்செய்த பெறற் கரிய பெரும் பேறே! மார்க்கண்ட செல்வமே! பெற்ஜேர்க்கு மக்க ளாற்று முதவி இதுவே யன்ருே? மருத்துவதி! இவன் இன்று முதல் பெரியோனுயினன், உலகை உய்ய வைத் தான். 'இறப்பதனுக் கேன்கடவேன்' — என் கின்ற ஏக்கத்தை எங்க வைத்தான். இனிமேல் நமக்கென்ன குறை, இப்போதே அடைந்தோம் துறக்கம்! மைந்தனே மார்க்கண்டா! யாங்கள் உன்னை ஆசிர்வதிப்பதற்கும் அருகரல்லேம்; இனி உலகு உய்யும் வண்ணம் உற்றதைச் செய்து, உம்பர்பிரானுகிய உமாபதியின் அருளை ஊழிக் காலத்திலும் மறவாது, உலகத்தில் உண்மையை நிலைநாட்டி, முக்காலமு மறிந்து நடந்து, முதல் வன் வழியில் நின்று, எக்காலமும் இன்பத் தையே அனுபவித்து இருந்து, வாழ்வாயாக.

## VII புது இயமன்

புனங்காட்டு மண்விண்ணும் அஞ்சவருங்
காலனையும் போடா வென்றே
இனங்காட்டு மார்க்கண்டன் கடிந்துபதி
ஞறுவய தென்றும் பெற்ருன்
அனங்காட்டுந் தண்டலையார் அடியாரெல்
லாமொருவர்க் கஞ்சுவாரோ
பனங்காட்டு நரிதானும் சலசலப்புக்
கொருநாளும் பயப்படாதே.

கடமையைச் செய்வதில் ஈசன் கருத்தையும் கடக்கலா மென் றெண்ணி இயமன் அகங்காரங்

கொண்டு சிவ பூசையின்கண்ணே மனம் பற்றியிருந்த மார்க்கண்டனை இருமாப்போடு எதிர்த்துக் கடவூர்க் காட்டில் கண்ணுதற் பெருமான் காலுதையுண்டு இறந்து பட்டு இழிவடைந் திருக்க, பூலோகத்தின் கண் இறப்பென்ப தின்றி உயிர்களின் தொகை உயர உயர, பூமிதேவி பாரத்தைத் தாங்க ஆற்றாதவளாய் அழுங்கித் துன்புற்று, இமையா நாட்டாருக்கு இறை வனாகிய இந்திரன் முன் சென்று, தனது குறையைத் தெரிவித்துக் கொள்ள, தேவர் கோமான், உற்ற தறிந்து உமாபதி வீற்றிருக்கும் வெள்ளிமலைக்கு விரைந்தேகி, அப் பசுபதியின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்து, "எம் பெருமானே, எங்கள் நாய கனே! யாவர்க்கு முதல்வா! யாவும் வல்லோனே! இயமன் இறக்கப் பூபாரம் தாங்க மாட்டாளாய்ப் பூதேவி வருந்துகின்றாள். அவள்மீதும் ஆன் மாக்கள்மீதும் சிறிது கடைக்கணித்து நமது அருட் டன்மைக் கொக்க அடவியின்கண்ணே அசையாது கிடக்கும் அந்தகன் தன்னை அழைத்தருள்வீராக, இதுவே எனது வேண்டுகோள்," என்றலும் சிவ பெருமான் தேவர்கோனை நோக்கி, "அப்படியே செய்வோம், மார்க்கண்டனையும் அழைத்துக்கொண்டு கடவூர் வனம் செல்வாயாக, யாம் அங்கு வருவோம்," என்று கட்டளை யிட்டு இந்திரனை அனுப்பிவிட்டார்.

இந்திரன் அதிசீக்கிரமாகச் சென்று மார்க்கண் டரை அழைத்துக் கொண்டு கடவூர் வனம் சென் றிருந்தான். சிவபெருமான் ஆங்கு யாவர்க்கும் பிர சன்னராய்த் தரையின்கண் தாழ்ந்து கிடக்கும் தரு மனை நோக்கி "இயமனே எழுந்திரு" என்று திரு

வாய்மலர்ந்தருளின உடனே, அவன் தூங்கி விழித்த வன்போல் திடுக்கென்றெழுந்து தன்முன்னே நிற்கும் தேவர் தேவனை நோக்கி, "என தாண்டவனே, என்ன கட்டளை" என்றான். எம்பெருமான் இயமனைப் பார்த்து "சிவபூசையில் சிந்தை செலுத்தியிருந்த மைந்தன் மார்க்கண்டனை மறுத்து ஒறுத்தபடியால் சிலகாலம் நின்னரசிழந்து அல்லலுற்றனை. உனக்கு இதுவே போதுமானது. இனிமேல் எமது அடியார்களை எம்மைப் போலவே எண்ணி அவர்களிடம் செல்லாதிருப்பாயாக. யாமிட்ட கட்டளைப்படி நின் கடமையைச் செலுத்த நேராதபோது, நீ எம்மைக் கேட்டல்லவோ எதையுஞ் செய்யவேண்டும். அவ்வாறன்றி அடாது செய்து படாது பட்டாய். இனிமேலாவது இந் நியமத்தின்படி நின்று, நின் செங்கோலைச் செம்மை செய்துகொள்வாயாக. இப்போது உன் பரிவாரத்துடன் உனதுலகு சென்று உற்றதை யறிந்து செங்கோ லோச்சிச் சீர் பெற்று வாழ்வாயாக," என்று திருவாய் மலர்ந்தருளிக் கைலைக்குத் திரும்பினார். அதன் பிறகு அறக்கடவுள் அருகே இருந்த மார்க்கண்டரை நோக்கி, "தவக்குலமணியே! அடியேனுக்கு ஞானத்தை வலிய ஊட்டிய வள்ளலே! உமக்கு வந்தனம். யான் நும்பால் அறியாது செய்த பிழையை அகத்திற் கொள்ளவேண்டா. அதற்காக நும்மை முக்காலும் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்; எனக்குச் செலவு கொடுத்து அனுப்ப வேண்டும்," என்றியம்ப, மார்க்கண்டர் அவனுக்குச் சில புத்திமதிகளைச் சொல்லி, மரியாதை செய்து அனுப்பி விட்டார். இந்திரனும் மார்க்கண்டரோடு சிலநேரம்

அளவளாவிக்கொண்டிருந்து விடைபெற்று விண்ணுலகஞ் சென்றான்..

மார்க்கண்டர் தமது பெற்றோரிடஞ் சென்று சிலகாலம் அவர்களுடனிருந்து, அப்புறம் தமதிஷ்டப்படியே பல க்ஷேத்திரங்களையுங் கண்டு தரிசிக்கச் சென்றார். அவ்வாறு மார்க்கண்ட முனிவர் பலவிடங்களுக்குச் சென்று, பல முனிவர்களைக் கண்டு, அவரவர் வாழ்த்துக்களைப் பெற்று, பிறகு முனிவர்க்கு முனிவராய் முதன்மைப் பதவியடைந்து, இப்போதும் இவ்வுலகின் கண்ணே இஷ்டப்படியே எங்குமிருந்து, இன்புற்று, உயிர்களின் உய்வையே கோரிக்கொண்டு, குன்றவில்லியின் அருள் அனைத்தினையும் பெற்றவராய் ஒன்றாலொன்று குறைவில்லாமல் நிறைமனத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே — உலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலும் கரி.

(நீதி நெறி விளக்கம்).

# அநுபந்தம்

---

## I. குறிப்புக்கள்.

பக்கம்

7 குருகுலவாசம் — ஒரு குருவினிடம் மாணுக்கர் பலர் கூட்டமாகக் கூடிச் சேர்ந்து கல்வியிற் பயிற்சி செய்துகொண்டு அவருடன் வசித்திருத்தல். நியமம் — நூற்களை யோதுதல் முதலிய கடமைகளை முறைமையாகச் செய்தல். நிட்டை — பரிசுத்த மனத்துடன் கடவுள் தியானம் செய்தல்.

9 யோகக்ஷேமம் — சிறந்த வாழ்க்கையும் நோய் நொடியின்மையும்.

11 அறுசுவை — கைப்பு (கசப்பு), தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு (உப்புறைப்பு), துவர்ப்பு, கார்ப்பு (காரம்).

12 தருமசங்கடம் — தள்ளக் கூடாத தப்பு; necessary evil.

13 காலவிளம்பனம்—நேரம் தாழ்த்தல். நால்வகைப் பதார்த்தங்கள் — உண்ணல், தின்னல், நக்கல், பருகல் ஆகிய செய்கைகளுக் கேற்பச் சமைத்த கறிவகைகள்.

20 இருதுக்கள் — பருவகாலங்கள்: இளவேனில், முதிர்வேனில், முன்கார், பின்கார், முன்பனி, பின்பனி. பசுபதி — உயிர்களுக்கு நாயகன்; சிவபெருமான்.

24 திரோபவசக்தி — இது கடவுளுக்கிருக்கும் ஒரு வல்லமை; இதனுல் அவர் தமது செயல்களை ஆன்மாக்களுக்குத் தோன்ற வொட்டாமல் அவைகளின் நன்மைக் காகவே மறைத்து வைத்திருக்கின்ருர். திரோபவம் — மறைப்பு.

31 ஜீவன்முத்தர் — உலகத்தில் மற்றவர்களைப்போல் விவகாரத்தில் இருந்து உலகப்பற்றற்றவர்களாகிய ஞானிகள்.

---

## II. பயிற்சிக் கேள்விகள்.

1. ஓர் இருடியின் இருக்கையைப்பற்றி நீ கற்றதும் கேட்டதுமாகிய விஷயங்களை யெல்லாம் சொல்லு.
2. குச்சக முனிவர் தபோவன்மையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
3. மருத்துவதியார் விருந்தினரை யுபசரித்ததில் விசேஷ மென்ன? அதில் எவ்வாறு குறை நேர்ந்தது?
4. மருத்துவதியார் தன் கருத்தை உடனே மிருகண்டரிடம் வெளிவிடாததற்குக் காரண மென்ன?
5. சிவபெருமான் மிருகண்டருக்குத் தந்த வரம் அமைவுடையதுதானா?
6. கடவுளுடைய திரோபவ சக்தியினால் ஆன்மாக்களுக்கு விளையும் நன்மை யாது? அதை இச் சரித்திரத்தால் நிரூபித்துக் காட்டுக.
7. மார்க்கண்டனுக்கும் இயமனுக்கும் நடந்த சம்பாஷணையை நீ யெடுத்துச் சொல்வதுபோல் எழுது.
8. 'மாண்ட மகன்', 'உமக்கு வேண்டுமானால் கொண்டு வாருங்கள்' — இவற்றின் பொருளை ஆராய்க.
9. இயமன் மார்க்கண்டனைக் கொண்டுபோக முயன்றது நியாய மல்லவோ?
10. மார்க்கண்டன் சரிதை உலகத்துக்கு எதை எடுத்துக் காட்டுகின்றது?

Printed at the Caxton Press, Madras. — 1925 (B)